[2008 நவம்பர் 14

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள வெள்ளாற்றில், அதேபோன்று பரமனாற்றில் அந்தப் பிரச்சினை இருக்கிறது. அந்த இரண்டு ஆறுகளிலும் கரைகளை பலப்படுத்திக் கட்டுவதற்கு, Planning and Design-ல் வரைபடம் வரைந்துகொண்டிருக்கிறார்கள். விரைவில் Administrative sanction உடன் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு அனைத்து முயற்சிகளும் எடுத்துக்கொண்டிருக்கிறது.

(ஏ) மதுரை நகர், தாழ்தள சொகுசுப் பேருந்துகளில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரில் தாழ்தள சொகுசுப் பேருந்துகள் என்கிற முறையில் ஏராளமான புதிய பேருந்துகள் வர இருக்கின்றன. ஏற்கெனவே, தாழ்தளம் என்பது ஒரு படி இறங்கி இருக்கிறது. பயணக் கட்டணம் என்பது பல மடங்கு உயர்ந்திருக்கிறது. திருச்சியிலே ஒரு ஸ்டேஜுக்கு இரண்டரை ரூபாய். விருதுநகரிலே அதே மாதிரி. மதுரை மாநகர மக்களுக்கு மாத்திரம் ஒரு ஸ்டேஜுக்கு 5 ரூபாய் என்கிறபோது, அது நீதியான செயலாக இல்லை. ஆகவே, இதைக் குறைத்து சரி செய்யவேண்டும். பயணக் கட்டணத்தைக் குறைக்கவேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். நானும் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். முதல் நாளிலிருந்து எடுக்கப்படவில்லை. அந்தப் பயணக் கட்டணத்தைக் குறைத்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதைச் சரி செய்ய முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சின்னசாமி, உட்காருங்கள் முதலில். நான் கூப்பிடுகிறேன், உட்காருங்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள், மதுரை மாநகரில் ஓடுகின்ற தாழ்தள சொகுசுப் பேருந்துகளுக்கு அதிகக்

2008 நவம்பர் 14] [திரு. கே.என். நேரு]

கட்டணம் வசூலிக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால், திருச்சியிலும், விருதுநகரிலும் குறைவாக இருப்பதாக இங்கே சொன்னார்கள். தாழ்தள சொகுசுப் பேருந்துகளை சென்னை மாநகரிலும், மதுரை மாநகரிலும் மட்டும்தான் இயக்கிக் கொண்டிருக்கிறோம். திருச்சியிலும், விருதுநகரிலும், இயக்குகின்றபோது, சாதாரணப் பேருந்தினுடைய பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால், இடைக்காலத் தீர்வாக, ஒரு மாதம், இரண்டு மாதத்திற்காக தாழ்தள சொகுசுப் பேருந்துகள் அங்கு சென்றிருக்கின்றன. மீண்டும் அவர்களுக்கான சாதாரணப் பேருந்துகள் வருகின்றபோது, அவற்றை எடுத்து நகர்ப்புறங்களுக்குக் கொண்டு வந்துவிடுவோம். மேலும் சொன்னால், மொத்தம் தமிழ்நாட்டிலே தாழ்தள சொகுசுப் பேருந்துகள் 867 தான் ஓடுகின்றன. ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கின்ற மொத்தம் இருபதாயிரம் பேருந்துகளிலே வெறும் 867 பேருந்துகள் மட்டுமே தாழ்தள சொகுசுப் பேருந்துகள். அவற்றிலே, சென்னை மாநகரிலே மட்டும் 564 பேருந்துகளும், மதுரையிலே 225 பேருந்துகளும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மீதம், விழுப்புரத்தில் பத்தும், கும்பகோணத்திலே இருபத்தி ஐந்தும், கோவையிலே நாற்பத்து மூன்றும், இது இடைக்காலத்திற்கு, சாதாரணப் பேருந்துகள் பற்றாக்குறை காரணமாக, பழைய பேருந்துகளை மாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு அங்கு தரப்பட்டிருக்கின்றனவே தவிர, தொடர்ந்து அங்கு ஓட்டப்படுவதில்லை. மீண்டும் அவை எல்லாம் இங்கு வரும்.

ஆனால், அதே நேரத்தில் இந்தக் கட்டணம் உயர்வாக இருக்கிறது என்று பொது நல வழக்கு ஒன்றை மதுரை நீதிமன்றத்தில் ஒருவர் தொடுத்திருந்தார். பொது நல வழக்குத் தொடுக்கின்றபோது அங்கு நீதிபதி என்ன சொன்னார் என்று சொன்னால், அதிகமான வசதிகள் இருக்கின்றபோது, அதிகமான தொகை கொடுப்பதில் தவறு இல்லை. இதுபோல் பொது நல வழக்குப் போடக்கூடாது என்று, அந்த வழக்குப் போட்டவருக்கு அபராதம் விதித்திருக்கிறார். எனவே, இந்தக் கட்டணம்கூட நாங்கள் நிர்ணயித்தது இல்லை. இந்தக் கட்டணம் என்பது தி.மு.க. ஆட்சியிலோ, நம்முடைய முதல்வர் அவர்களோ நிர்ணயம் செய்யவில்லை. கடந்த கால ஆட்சியில் நிர்ணயம் செய்ததுதான். நாங்கள் அதை ஓட்டிக்கொண்டிருக்கிறோம். எனவே, இங்கு ஒரு நீதி, அங்கு ஒரு நீதி இல்லை. அனைவருக்கும் ஒரே நீதிதான். வணக்கம்.

TRUTH ALONE TRIUMPHS